# INTERNATIONAL INDIAN SCHOOL – DAMMAM
## SECOND TERMINAL EXAMINATION (2017-18)
## MIDDLE SECTION
# TAMIL – CLASS –VII

**TIME – 3 HOURS** **MAX.MARKS – 80**

நேரம் - 3 மணி தமிழ் - ஏழாம் வகுப்பு மதிப்பெண்கள் - 80

---

## பிரிவு-1

**அ. கொடுக்கப்பட்டுள்ள பத்தியைப் படித்து, கேட்கப்பட்டுள்ள பல்விடை வினாக்களுக்கு விடையளிக்க :-** 5 x 1= 5

முக்கனிகளுள் ஒன்று மாம்பழம். மாம்பழங்களில் பல வகைகள் உள்ளன. மல்கோவா, பங்கனபள்ளி, பீத்தர், ருமானி, நீலம், கிளிமூக்கு முதலியன மாம்பழ வகைகளில் சிலவாகும். சேலத்து மல்கோவா மாம்பழத்திற்கு தனி சிறப்பு உண்டு. சுவையும் அதிகம். மாம்பழத்தை பயன்படுத்தி பல வகையான உணவுப் பொருட்கள் தயாரிக்கிறார்கள். மாம்பழம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

**வினாக்கள் :-**

1. __________ முக்கனிகளுள் ஒன்று.

அ. கொய்யா ஆ. மாதுளை இ. மாம்பழம்

2. சேலத்தில் கிடைக்கும் தனி சிறப்புடைய மாம்பழம் இது.

அ. பங்கனபள்ளி ஆ. மல்கோவா இ. ருமானி

3. மாம்பழத்தைப் பயன்படுத்தி பல வகையான __________ தயாரிக்கப்படுகின்றன.

அ. உணவுப்பொருட்கள் ஆ. கனிமப் பொருட்கள் இ. தாது உப்புகள்

4. மாம்பழம் வெளிநாடுகளுக்கு __________ செய்யப்படுகிறது.

அ. ஏற்றுமதி ஆ. இறக்குமதி இ. பண்டமாற்று

5. இவை மாம்பழ வகைகளில் சேராதது ஆகும்

அ. பீத்தர் ஆ. கிளி முக்கு இ. பூவன்

**ஆ.பின்வரும் பத்தியைப் படித்து , கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்க :-**

**5 x 1= 5**

பாவேந்தர் பாரதிதாசனாரைப் பற்றி அறிஞர்அண்ணா அவர்கள், "அமெரிக்கக் கவிஞர் வால்ட் விட்மனுக்கு இணையானவர்" என்று பாராட்டியுள்ளார். பாரதிதாசனின் பாடல்களைப் படித்தால் சமுதாயச் சிந்தனை வளரும். எனவே இவரது பாடல்களை பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை படிக்க வேண்டும். பாரதிதாசனார், "அழுபவன் கோழை ! நமது வாழ்க்கை அழுவதற்கல்ல" ; சிரிப்பதற்கும் மகிழ்வதற்குமே உள்ளது என்கிறார். நம் நாட்டில் குமணன், சீதக்காதி, கர்ணன் என்பவர்கள் கொடுப்பதற்காகவே வாழ்ந்தனர். நம் தேவைக்குப் போக மிஞ்சியதை பிறருக்குக் கொடுப்பதில் கிடைக்கும் இன்பம் வேறு எதிலும் இல்லை என்கிறார் பாரதிதாசன். தானம் சிறந்தது , அதிலும் அன்னதானம் மிகச்சிறந்தது என்கிறார்.

**வினாக்கள் :-**

1.எது இன்பம் என பாரதிதாசனார் கூறுகிறார் ?

2.அறிஞர் அண்ணா பாரதிதாசனாரை எவ்வாறு பாராட்டியுள்ளார் ?

3.பாரதிதாசனின் பாடல்களை படித்தால் எவை வளரும் ?

4.பாரதிதாசன் நமது வாழ்க்கையைப் பற்றி யாது கூறுகிறார் ?

5.பிறருக்குக் கொடுப்பதற்காகவே வாழ்ந்தவர்கள் யாவர் ?

இ.தொலைக்காட்சியின் நன்மை , தீமைகள் குறித்து **கட்டுரையாக** எழுதுக :- **7 x 1=7**

ஈ.குடிநீர் வசதி செய்து தர வேண்டி பஞ்சாயத்துத் தலைவருக்குக் **கடிதம்** எழுதுக. **8 x 1= 8**

## பிரிவு-2

**இலக்கணம் :-** **15 x 1=1 5**

**அ.தகுந்த சான்றினைத் தேர்ந்தெடுத்து எழுதுக :-**

1.சுட்டுத்திரிபு

அ.இப்பெண் ஆ.அக்குதிரை இ.அந்த வீடு ஈ.இவ்வூர்

2.முற்றுப்போலி

அ. பந்தர் ஆ. அரைசன் இ. அஞ்சு ஈ. முன்றில்

3. பண்புப்பெயர்

அ. விருதுநகர் ஆ. மார்கழி இ. வெண்புறா ஈ. ஆடினான்

<u>ஆ. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து நிரப்புக :-</u>

4. காலத்தின் பெயரைக் குறிப்பது ______________

அ. சினைப்பெயர் ஆ. இடப்பெயர் இ. தொழிற்பெயர் ஈ. காலப்பெயர்

5. ஈற்றுப்போலி என அழைக்கப்படுவது ______________

அ. கடைப்போலி ஆ. முதற்போலி

இ. முற்றுப்போலி ஈ. முன்பின்னாக தொக்கப்போலி

6. சென்னை என்பது ______________

அ. பண்புப்பெயர் ஆ. பொருட்பெயர் இ. இடப்பெயர் ஈ. காலப்பெயர்

<u>இ. அடைப்புக்குள் கூறியவாறு பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :-</u>

7. அரைசன் (போலி நீக்கி எழுதுக)

அ. அரசு ஆ. அரசன் இ. மன்னன் ஈ. ராஜா

8. குயில் (செய்மை சுட்டு ஆக்குக)

அ. கருத்த குயில் ஆ. பாடும் குயில்

இ. கருங்குயில் ஈ. அக்குயில்

9. இலைஞ்சி (எவ்வகைப்போலி என எழுதுக)

அ. கடைப்போலி ஆ. இடைப்போலி

இ. முற்றுப்போலி ஈ. முன்பின்னாக தொக்கப்போலி

<u>ஈ. தகுந்த இலக்கணக் குறிப்பைத் தேர்ந்தெடுத்து எழுதுக :-</u>

10. வட்ட மேசை

அ.பண்புப்பெயர் ஆ.பொருட்பெயர் இ.இடப்பெயர் ஈ.காலப்பெயர்

11.முன்றில்

அ.முதற்போலி ஆ.இடைப்போலி

இ.முற்றுப்போலி ஈ.முன்பின்னாக தொக்கப்போலி

12.நண்பனோ?

அ.அகச்சுட்டு ஆ.அகவினா இ.புறச்சுட்டு ஈ.பு றவினா

உ.சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக :-

13. அ.பெயர்ச்சொல் இரண்டு வகைப்படும்

ஆ.பெயர்ச்சொல் மூன்று வகைப்படும்

இ.பெயர்ச்சொல் ஐந்து வகைப்படும்

ஈ.பெயர்ச்சொல் ஆறு வகைப்படும்

14.அ.தற்போது வழக்கில் இல்லாத சுட்டு எழுத்து -அ

ஆ.தற்போது வழக்கில் இல்லாத சுட்டு எழுத்து -இ

இ.தற்போது வழக்கில் இல்லாத சுட்டு எழுத்து -உ

ஈ.தற்போது வழக்கில் இல்லாத சுட்டு எழுத்து -எ

15.அ.முற்றுப்போலி, முன்பின்னாகத் தொக்கபோலி –இறுதிப்போலியைச் சாரும்.

ஆ.முற்றுப்போலி, முன்பின்னாகத் தொக்கபோலி –இடைப்போலியைச் சாரும்.

இ.முற்றுப்போலி, முன்பின்னாகத் தொக்கபோலி –முதற்போலியைச் சாரும்.

ஈ.முற்றுப்போலி, முன்பின்னாகத் தொக்கபோலி –போலிகள் அல்லன.

## பிரிவு-3

**அ.பொருள் கூறுக :-** 3x 1= 3

1.கவளம் 2.அருமை 3.நெஞ்சுரம்

**ஆ.பிரித்து எழுதுக :-** 3 x 1= 3

1.அறங்காக்கும் 2.பெருந்தேர் 3.சிவப்பணுக்கள்

**இ.எதிர்சொல் எழுதுக :-** 3 x 1= 3

1.குறை x 2.கவலை x 3.நல்வழி x

**ஈ.சேர்த்து எழுதுக :-** 3 x 1= 3

1.சிறுமை +உளி 2.உருவம் + கண்டு 3. சிறை + இட்டனையே

**உ.நிரப்புக :-** 2 x 1= 2

1.இளந்தத்தனார் ________________ எனக் குற்றம் சாற்றப்பட்டார்.

2.தன்னைத் தானே பாராட்டும் குணம் ____________ குணம்.

**ஊ.ஓர் எழுத்தில் ஒரு மொழி எழுதுக :-** 2 x 1= 2

1.ஊ - ____________

2.ஐ - ____________

**எ.தொகைச்சொல்லை விரித்தெழுதுக :-** 1 x 2 = 2

நாற்றிசை –

**ஏ.பின்வரும் எண்களை எழுத்தால் எழுதுக :-** 3 x 1= 3

1.64 -

2.500

3.10,000 –